உ

சிவமயம்

நயினை

# நிரோட்டயமக அந்தாதி



நயினை புலவர் வே க. நாகமணிப்பிள்ளை
அவர்களால் பாடப்பெற்றது.

இந்நூல்
நயினை உயர்வேளாண்குல திலகர்

## மு. க. சங்கரப்பிள்ளை அவர்களின்
சிவபதப் பேறு குறித்த

## ஞாபகார்த்த மலராக

மறுபிரசுரம் செய்யப் பெறுகின்றது

1987

விவேகானந்தா [illegible] லிமிட்டட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நயினை

# திரேட்டயமக அந்தாதி



நயினை புலவர் வே. க. நாகமணிப்பிள்ளை
அவர்களால் பாடப்பெற்றது.

இந்நூல்
நயினை உயர்வேளாண்குல திலகர்

## மு. க. சங்கரப்பிள்ளை அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

## ஞாபகார்த்த மலராக

மறுபிரசுரம் செய்யப் பெறுகின்றது

1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீமான் மு. க. சங்கரப்பிள்ளை அவர்கள்

தோற்றம் : 31 - 3 - 1911

மறைவு : 13 - 12 - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நயினாதீவு

## வேளாள குலதிலகர்

# கந்தர் சங்கரப்பிள்ளை

# அவர்களின்

## பிரிவு குறித்த

# இரங்கற்பா

## திதி நிர்ணயம்

ஆக்கமுறும் அக்ஷய ஆண்டாகுங் கார்த்திகை பூர்வம்
நோக்குந் திதிதுவா தசி நோன்நாள் — ஊக்கமிகும்
எம்பாவை நேசன்பிருந்து ஏந்தல் சங்கரப்பிள்ளை
தென்பால் சிவன்கழல் சேர்ந் தான்.

## காப்பு

சங்கரப் பிள்ளை சரிதத்துக் கைந்துகரச்
சங்கரன் பிள்ளை தன்தாள் சரண்.

## வாழ்க்கை வரலாறு

சீர்பூத்த தொன்நயினைத் திருப்பதியில் நாகம்மை
சேர்கீர்த்தி நன்கு செழித்தகுடி — ஏர்பூத்த
காராளர் கோமான் கந்தர் கடிமணத்தால்
சீராளுந் தேவி சின்னம்மை — ஆராநல்
அன்புத் தலைமகனாய் அழகுக்கு மன்மதனாய்த்
துன்பந் தனையறியாத் தோன்றல் — இன்பமுகம்
நெற்றித் திலகம் நீள்முறுக்கு மீசை ஒளிர்
வெற்றித் திருவிஜயன் விறல்வீமன் — உற்றவர்கள்
சொந்தங்கொள் தோன்றல் அன்புச் சோதரிகள் முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமிலா அன்புசொரி விசாலாட்சி — பந்தமுறு
சிவகாமி, தையலம்மை தேடரிய சோதரர்கள்
தவவாழ்வு சேர்வணிகன் கனகரத்தினம் — சிவநேசன்
இலங்கைத் தலைநகரின் எழில்சேர் வணிகதலம்
துலங்கும் அஜந்தாபொன் னம்பலவன் — கலங்காநல்
உள்ளத் துகந்த அண்ணன் உள்ளூர் கொழும்புமுதல்
பிள்ளைப் பருவமுதல் பெருந் தொழில்கள் — அள்ளக்
குறையாநிதி சேர்த்த கோமான் குணநலங்கள்
நிறையப் பொலிந்த நிமிர்நடையோன் பிறைநுதலார்
காதல் மயக்குமெழிற் கட்டழகன் தன்மகட்குத்
தோதென்று ணர்ந்த சின்னத்தம்பி — மாதரசி
தையலம்மை தன்தவத்தால் தங்கம யிலனைய
மையல் கொழுமெழிலாள் சௌந்தரத்தை — ஐயனிடம்
இல்லறத்தே இணைந்து இரதிமதனும் வாழ்ந்து
பல்நலமும் கூட்டி வைத்தார் பண்பாய் - நல்லினிய
தன்சோதரர் மணந்த தகைசாலும் மைத்துனியர்
பன்னலஞ்சேர் பாலாம் பிகை மயிலாள் — பொன்மனத்தி
கமலாம்பிகை யோடு கண்ணினிய மைத்துனர்கள்
இமவானென இலங்கு சின்னையா — அமைவான
தோற்றம்பெறு தோன்றல் விசுவலிங்கத் துரையன்
ஏற்றம்பெறு சிற்பி சின்னையா — மாற்றமிலா
மைத்துனராய் வாய்த்த மறவன் தன் இற்கிழத்தி
உத்தம சோதரிகள்பேர் உரைக்கின் — வித்தகனும்
அருட்பிரகா சன்னல் அருந்தேவி நாகம்மை
பொருட்குவை சேர் நாகராஜ் பொருந்து — மருட்சியறு
சின்னம்மை சிங்கநடை குகதாசச் செம்மல் இணை
அன்னநடைச் செல்லம்மை அன்புமயில — வன்னமுற
அத்தான் என அழைத்த அருங்குணத்தோன் இல்லறத்
சொத்தாக வந்த துரைரத்னம் — வித்தகனும் ]தின்
ஞானகணேச ரத்ன நவநீத ரெத்தினனும்
ஆன புதல்வரென அகமகிழ்ந்து — வானவரும்
சிரந்தாழ்த்து சீர்மைத் திகம்பர ஈஸ்வரியாள்
பரந்தமன ஞானேஸ்வரி யோகேஸ் — இரண்டுடனே
அறுகோன் ஒரு சேர்ந்த அன்று பிறந்த மகள்
உறுபேர் சடாட்சரமணி உவந்து — பெறுபேர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தைக் கொருமகளாம் விக்னேஸ்வரி மகள்மார்
அத்தனைபேர் அப்பாவோ என்றழைக்க — சித்தமகிழ்
மருமக்களாக வந்தோரில் முதல்வனவன்
திருமகனும் கோபால கிருஷ்ணன் — பெருமையுறு
சிவரெத்தின இளவல் ஸ்ரீகுலா ஆனந்தன்
தேவமகன் உமாதேவி திருப்பொலியும் — மாதவத்தி
கனகேஸ்வரி மயிலாள் கருத்துவந்த மாமா
மனமார்ந்த மக்கள் வழிப்பேரர் — இளமானும்
அனுசூயா மின்னாள் அன்புப் பிரபுகா
மனநீதி வழிநிற்கும் கற்பனா — தனுவீர
காண்டீபன் காஞ்சனா, கநீதனா, தயாநிதி
மாண்ட புகழ் வாகினி, குஞ்ஜினி — தூண்டுசுடர்
அறிவுசெறி கஜரூபன் அழகு ஜெகதீஸ்வரி
செறிஅறிவு ஞானகாந் செம்மல் — பெறலரிய
கலிவிஒளி சுடரும் கஜநீதன் ஸஹானந்தி
இன்பமுறு பேரரென இறுமாந்தோன் — அன்புமிகு
சோதரரின் சுகங்காணத் தோணி துரவேறி
ஆதரவோ டவரோடு அகமகிழ்ந்து — சோதனைகள்
வாழ்வில் வருவதனை மனத்துணிவோ டேற்று
தாழ்வு பிறர்க்கியற்றாத் தன்மையனாய் — ஊழ்வினையின்
முற்பயனோ யாழ்நகர்க்கு முந்தி இருதயநோய்
உற்றார்க்குந் தோன்றா துறுத்த — முற்றாகத்
தன்னறிவு தானிழந்தான் தமரை இழந்தான் யமனும்
மன்னவனின் அழைப்பை வலிந் தேற்றான் — என்னவிதி
உற்றார் உறவினர்கள் ஊர்புகழ வாழ்ந்தான்
வற்றாத அன்பதுவே வாழ்வென்றான் — முற்றாக
எழுபத்து ஐந்தாண்டு இவ்வுலகில் வாழ்ந்தான்
பழகற் கினிய பண்பாளன் — அழுதற்கு
என்னுளது யாமும் இவன்வழியே தான் போவோம்
அன்னவனின் பேர்விளங்க அறமாற்றி — பின்னமிலா
ஆத்மாவின் சாந்தி அடையப் பிரார்த்திப்போம்
ஆத்தாளாம் நாகபரை அருள்வாள்:

சுபம்

— நயினை பசிக்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பிரசாதம்;

லௌகிக வாழ்க்கைக்கிடையில் தூய தெய்வீக வாழ்க்கை வாழ விரும்புவதும், ஆத்மானுபூதியடைய விழைவதும், சாத்வீகமானவர்கள் நிறைந்த குடும்பத்தில் பிறப்பதும் ஆகிய இவையெல்லாம் இறைவனால் கொடுக்கப்படும் மிக அரிய வரப்பிரசாதங்கள். அவற்றை மிக ஜாக்கிரதையாகப் பாதுகாத்தல் வேண்டும். விழிப்புடன் இருங்கள். யோகமாகிய குளிர்தருவின் நிழலில் தங்கியிருந்து இளைப்பாறுங்கள்; கடவுளுடைய வரப்பிரசாதத்தையும், கருணையையும் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இறைவனுடைய நாமத்தை ஜபியுங்கள். குடும்பத்துடனும், நண்பர்களுடனும் அவருடைய புகழைப் பாடுங்கள்

இறைவனுடைய நாமம் தேவாமிர்தம். நாமமே உங்களுடைய ஒரே அடைக்கலமும், தஞ்சமும் செல்வமுமாகும். நாமமும் நாமியும் ஒன்று. எப்பொழுதும் பகவானுடைய நாமங்களை பக்தி சிரத்தையுடன் பாடுங்கள், கீர்த்தனம் செய்யுங்கள். இக் கலியுகத்தில் இதுதான் முக்கிய சாதனையாகும்.

துதிப்பாக்கள் சிலவற்றையோ அல்லது சில மந்திரங்களையோ அல்லது பகவானுடைய நாமத்தையோ இடைவிடாது ஜபித்துக் கொண்டிருங்கள். இது உங்கள் எண்ணத்திற்குத் தெய்வீகப் பின்னணியாக விளங்கும்.

உங்கள் இதய கமலத்தின் அடித்தளத்திலிருந்து கீழ்க்கண்டவாறு பகவானைப் பிரார்த்தனை செய்யுங்கள்; 'நான் தங்களுடையவன். எல்லாம் தங்களுடையவைகளே. தங்கள் சங்கல்பமே நடைபெறும், நான் தங்கள் திருக்கரத்தில் ஒரு கருவிமாத்திரமாக இருக்கிறேன். எல்லாவற்றையும் செய்வது தாங்களே. தாங்கள் நீதி உடையவர்கள். எனக்கு விசுவாசத்தையும் பக்தியையும் கொடுத்தருளுங்கள் ''

— ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எம்பிராட்டியாம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மீது பாடப்பெற்ற நயினை நிரோட்டயமக அந்தாதி என்ற நூல் நயினை நாகமணிப் புலவரால் பாடப் பெற்று 1930-ம் ஆண்டு பிரம்மோதூத வருஷம் ஆனிமாதம் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக் கூடத்தில் பதிக்கப் பெற்று வெளிவந்தது. சக்தியின் மகத்துவத்தையும் நயினையின் சிறப்பியல்புகளையும் வியந்துரைக்கும் நயினை நாகமணிப் புலவரின் பாடல்கள் புதைபொருளாகப் புதைந்து போய்விடாமல் வருங்காலச் சந்ததியினரும் அறியக் கூடியதாக அவற்றை மீண்டும் வெளிக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக எனது அன்பிற்குரிய மாமா திரு. மு. க. ச. அவர்களின் ஞாபகார்த்த மலராகிய இம் மலரில் அந்த நூல் மறுபிரசுரமாகின்றது.' இம்மலரை மிகவும் பாதுகாத்து வைக்க வேண்டியது படிப்பவர் கடமையாகும். தேடினாலும் கிடைக்காத நயினை நாகமணிப் புலவரின் பாடல்களைத் தொடர்ந்தும் இப்படியான ஞாபகார்த்த மலர்களில் வெளியிடுவதன் மூலம் கல்வெட்டு என்ற சொல்லுக்கு ஏற்ப என்றும் அழியாத கல்வெட்டு எழுத்துப் போன்று ஞாபகார்த்த மலரும் பாதுகாப்புடன் மிளிரும் என்பது சிறியேனது நம்பிக்கை.

நா. கோபாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நயினை

## நிரோட்டயமக அந்தாதி

என்னும் இந்நூலினை

சிவபதமெய்திய எமது பேரன்பிற்குரிய பெரிய தந்தை

**உயர்திரு. மு. க. சங்கரப்பிள்ளை அவர்களின்**

ஞாபகார்த்த மலராக பிரான்சிலுள்ள பெருமக்களாகிய நாம் எமது அன்புக் காணிக்கையாக சமர்ப்பிப்பதில் தேறுதல் பெறுகின்றோம்.

நாகராசா உதயகுமாரன்
நாகராசா சூரியகுமாரன்
திருமதி உதயகுமாரி இராஜகுணசிங்கம்

12–01–1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சுன்னுகம் காவியபாடசாலைத் தலைமை ஆசிரியரும்
வித்துவானுமாகிய புன்னுலைக்கட்டுவன்

## பிரம்மஸ்ரீ சி. கணேசையரவர்கள் இயற்றிய

## சிறப்புப்பாயிரம்

திருவிளங்கு நயினையந் நிலகத்து வாழுந்
தேவியொரு நாகபூஷணி தன்மீதே
கருவிளங்கு முயிர்கள் படித்தின்பமேவக்
கனிநிரோட்டய மகவந்தாதி செய்தான்
பெருவிளங்கு கலைகளெலாம் தெளியக்கற்றேன்
பெரிதுகவி யியற்றுகையினிற் பாடும் நாவான்
தருவிளங்கு கரமுடையான் நிதிமிக்கோன்
சகம்போற்றும் நாகமணிப் புலவன்றனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமான். வை. இராமநாதன் அவர்கள்
## சொல்லிய

# அணிந்துரைச் செய்யுள்

### கலித்துறை

பேராசிரியர் பெரும்புலவோருமுன் பேசுதுடி
சேராயமகவந்தாதி நயினையிற் றேவிதன்மேல்
ஆராத காதலுடன் புனைந்தான் வெள்ளலர்ப்பொகுட்டு
ஞாரீசமின்னுறை நாவுடை நாகமணி நயந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நயினை
# நிரோட்டயமக அந்தாதி

## காப்பு

நிரகந்தங்கந்தகைசரனயினைமினிடரிசே
ராரகந்தங்கந்தரித்தாட்கந்தாதியலங்கரிக்கக்
காரகந்தங்கந்தனைநேரநாடியகைதரநற்
றாரகந்தங்கந்தனிற்காட்டிறைதன்சரண்சரணே.

## பதவுரை

நீர், அகம், தங்கு, அம், தகைசால் - நீர் நிலைகள் பொருந்தப் பெற்ற அழகிய தகுதியையுடைய நயினை யம்பதியின்கண்ணே எழுந்தருளியிருக்கின்ற நீண்ட சர்ப்பங்களாலியைந்த மாலையாகிய தொடரைத் திருமேனியின் கண்ணே தரித்தருளிய நாகபூஷணியம்பாள் பேரில் (நிரோட்டயமக) அந்தாதியைச் சிறப்பாகச் செய்தற்கு, கார், அகம் - எனது இருண்மயமான மனமானது தங்கம் போற் சுத்தமடையவும் நினைக்கின்ற (நல்ல சொல்லும் பொருளுந்தந்து) உதவவும், நல், தாரகம் தம் கம் தனில்- நல்ல பிரணவ சொருபத்தைத் தம்முடைய சிரசினிடத்தே காட்டி அருளுகின்றவராகிய விநாயகக் கடவுளுடைய திருவடிகளே புகலிடம் என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை
# நிரோட்டயமக அந்தாதி
## நூல்

அலரியனந்தங் கயனுயிரங்கணனுரழலிந்
தலரியனந்தங் கயனயந்தாடனையங்கத்தினென்
னலரியனந்தங் கயஞ்சேர் நயினையிலன்னையென்றேற்
றலரியனந்தங் கயிலையிட்டேத்தி டினஞ்சலின்றே, 1

அலரி அனம் தங்கு அயன் - சூரியனும் அன்னத்தில் வசிக்கின்ற பிரமனும், இந்திரனும், நிறைவுள்ள அக்கினியும் சந்திரனும். அலர் இயல் ஈந்து; அம்மை கயன்- பிரகாசிக்கின்ற இயல்பினையுடைய சங்கைக் கையிலே தரித்த திருமாலும், துதிக்கப்பெற்றவராகிய (நாகபூஷணி யம்பாளை)ச் சரீரத்திலே வருகின்ற, எல்லல் அரி அனந்தம் - இகழத்தக்க (பாவங்களை)த் தீர்க்கின்ற அளவற்ற தடாகங்கள் நிறைந்த நயினையம்பதியில் (எமது) தாயே என்று. ஏற்றல் அரிய நந்தம் கை, இலை - பெறுதற்கரிய நமது கையினுலெடுத்த பத்திரங்களையிட்டுத் துதிக்கின் யாதோர் பயமுமில்லை. எ — று.

அஞ்சக்கரந்திகழை யிடத்தாயடலானை யிடர்க்
கஞ்சக்கரந்திரித்தா ரிளையாளென தந்தியநே
ரஞ்சக் கரந்தையதா நின்றகாலையி லந்தகனு
ரஞ்சக் கரந்திடலின் — ருணாயினையி லாரணியே. 2

அஞ்சு அக்கரம் திகழ் ஐ - பஞ்சாட்சர சொருபியாய் விளங்குகின்ற தலைவராகிய சிவபிரானது வாமபாகத்திலிருப்பவரே! வலிய யானைக்கு (முதலையால்) வந்த துன்பத்துக்கு, அம் சக்கரம் - அழகிய சக்கராயுதத்தைச் சுழற்றியெறிந்த திருமாலுக்கு இளையவரே! எனது அந்தியநேரத்தில், சக்கு அரந்தையர் - கண்கள் வருந்தத் தக்கதாய் நிலைத்தபோது, யமனுனவன் அஞ்ச கரந்திடலின்றி, ஆள் - அஞ்சும்படி பிரசன்னமாகி ஆண்டருள்வீர் நயினையம்பதியின்கண் எழுந்தருளி இருக்கின்ற வேத முதல்வியே, எ — று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணியத்தந் தனக்கிணையாஞ் சடையத்தரத்தத்
தாரணியந்தந் திரநிறைந்தாள் கிரியந்நயினை
யாரணியத்தந் தடங்கணல்லாய் செல்லலன்றிலிற்சென்
றூரணியத்தந் திலரகன்றூர் தங்கையாரத்தையே. 3

ஆர் அணி அத்தம்-கொன்றைமாலையைத் தரித்த பொன் போலுஞ் சடையையுடைய பிதாவாகும் பரமசிவனது வாமபாகத்திலிருக்கின்ற வேதமுதல்வியும், அத்தந்திரம் – அந்தச் சிவாகமங்களிலே நிறைந்துள்ளவருமாகிய நாகபூஷணியம்பாள் எழுந்தருளியிருக்கின்ற நயினையம்பதியிலுள்ள மலையினிடத்தாள், ஆரணியத்து அம் தடங்கண் – காட்டினிடத்தே அழகிய நீண்ட கண்களையுடைய தலைவியே, செல்லற்க – அன்று எமது மனைக்கு வந்தவராகிய தலைவர், அணியத் தந்திலர் – தமது கையினிடத்துள்ள மாலையை (நீ) அணியும்படி தந்தாரில்லை; எ — று.

ஆரந்தரிக்கத்தரியாரிலேகிள்ளியர்ச்சனைக்கிந்
தாரந்தரிக்கத்தளையார்கங்காளியென்றஞ்சலிசெய்
யாரந்தரிக்கந்தளிசேர்நயினையடைந்திடற்கெண்
ணாரந்தரிக்கநடக்கின்றகாலையினூற்றிஇடர்க்கே. 4

அந்து அரிக்கத் தரியார் – அந்துப்பூச்சி யரிப்பினும் பொறுக்கமாட்டாதவராய் இருந்தும் பத்திரங்களையெடுத்து அர்சனைக்காகக்கொடுத்து, தரிக்க ஆரம் தளையார் – சாத்துதற்கு மாலையைக் கட்டார்கள், ஏனும் புமாலையைத் தரித்தவரேயென்று துதியார்கள், அந்தரிக்கு அம் தளி – அந்தரி யென்னும் திருநாமத்தையுடைய நாகபூஷணியம்பாளுக்கு அழகிய திருக்கோயிலமையப் பெற்ற நயினையம்பதியைத் தரிசித்தற்கு நினையார்கள், அந்தரிக்க – யாதோர் துணையுமில்லாது நடக்கின்ற இறுதிக்காலத்திலுள்ள வழித்துன்பத்துக்குத் (துணையாவார்) ஆர் - வேறியார்? எ — று.

ஆற்றங்கரையரிக்கண்ணியரேழையினுளெனச்சென்
றுற்றங்கரையடைத்தாரிடத்தாய்நினளிநயினை
யாற்றங்கரையகிலாநெஞ்சநெக்கினராங்கெனைக்கண்
டாற்றங்கரையனையாதலைநேர்கிலனண்டர்கட்கே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆல் தங்கு அரை அரி - ஆலமரத்திலே சயனிக்கின்ற வலப்பாகத்தைப் பெற்ற திருமாலின் கண்ணைப் (பூவாக) ஏற்றவரும் ஏழையாகிய செம்மனச் செல்விக்கு* கூலியாளாகச் சென்று வைகையாற்றின் கரையை அடைந்தவருமாகிய சிவபிரானது வாமபாகத்திலிருப்பவரே? நவிலையம்பதியில் எழுந்தருளியிருக்கின்ற உம்முடைய கிருபையால், தம் கரையகிலர் - தங்களது கரையாத நெஞ்சங்கள் நெக்குருகப் பெற்றவர்களைப் போலடியேனையுஞ் செய்து, ஆற்று - ஆறுதலுள்ளவனாகச் செய்தருள்வீர். அங்கு அரையனை - அந்த உலகத்திலே தேவர்களுக்கு அரசனாக இருப்பதையான் விரும்பவில்லை. எ—று.

அண்டத்தினனிந்தழற்கணிநீணயினைக்கணின்ச
ரண்டத்தினனல்லணியினராலரியாற்றெதிரே
ரண்டத்தினனந்தலினயர்ந்தேனையடாதசண்ட
னண்டத்தினநணியஞ்சலென்றுதரித்தாளினிதே. 6

அண்டத்து இனன் - ஆகாசத்திலே சஞ்சரிக்கின்ற சூரியனையும் சந்திரனையும் அக்கினியையும் கண்களாக உடையவரே! பெருமை பொருந்திய நயினையம்பதிக்குக் கண்ணாகவுள்ளவரே? நின் சரண் - உமக்கு அடைக்கலம் தத்து இன்னல் நல் அணியினரால் - தத்துக்களாலாகிய துன்பங்களினாலும் நல்ல பூஷணங்களைத் தரித்த மகளிராலும், அரி ஆற்று எதிர் - (சண்ட) மாருதம் வருகின்ற வழியிலே எதிர்ப்பட்ட, எரண்டத்து இனம் நந்தலின் - ஆமணக்கின் கூட்டம் கெட்டாற்போலத் (திரிகரணங்களும்) இளைக்கப் பெற்றனாகிய என்னைப் பொல்லாத யமனானவன் சமீபிக்கின்ற அந்த நாளில் எழுந்தருளிவந்து பயப்படாதேயென்று ஆதரவு செய்து சந்தோஷமாக ஆண்டருளும்; எ—று.

ஆளிக்கனகநிரையில்லநீணிலனுணையிற்செய்
யாளிக்கனகனிரசநில்லாதறியன்றிலங்கை
யாளிக்கனகனிரங்கநின்றுளணியார்நயினை
யாளிக்கனகநிரசந்திர்க்கநிலங்கடைந்தே; 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் இக் கனகம் - ஆளுகின்ற இந்தப் பொன்னும் பசுக்களும் வீடும் பெரிய நிலங்களும் ஏவலாட்களும், இக்கு அன கனிரசம் - கரும்பை யொத்த கனிரசங்களும் நிலையில்லாதன அறிவாயாக அந்நாளில் இலங்கையை ஆண்டவனாகிய இராவணனுக்கு சிவபிரான் அனுக்கிரகஞ் செய்தற்குக் காரணராய் இருந்தவரும் அழகு பொருந்திய நயினையம்பதியை உடையவருமான நாகபூஷணியானவர், இக் கல் நகம் நிகர் - (மனமே) உன்னிடத்துள்ள கன்மலை போலும் பாவங்களைத் தீர்க்கும்படி அந்நயினையம்பதியிலே சென்று நிற்பாயாக. எ—று.

அங்கணஞ்சந்திநின்றெங்கெயிங்கென்றசைந்தநந்தநல்லா
ரங்கணஞ்சங்கடந்திந்தநெஞ்சங்கசிந்தார்நயினை
யங்கணஞ்சந்தடந்தந்தகந்தன்றெரிந்தன்னையின்னே
ரங்கணஞ்சஞ்சலஞ்சிந்திடென்றண்டிலனுதர்யே. 8

அங்கணம் சந்தி - முற்றத்திலும் சந்திகளிலும் நின்றுகொண்டு (ஆடவரைக் கண்டளவில்) இவ்வழியாலெங்கே செல்கின்றீர்களென்று அசைக்கின்ற அந்த வேசிகளது. அம் கண் நஞ்சம் - அழகிய கண்களாகிய நஞ்சினை வென்று இந்த மனமானது உருகப் பெற்று நிறைவுற்ற நயினையம் பதியினிடத்தே எழுந்தருளியிருக்கின்ற, அஞ்சம் தடம்- அன்னங்கள் பொருந்திய சரவணப் பொய்கையிலே தோன்றிய கந்தக் கடவுளால் அறியப்பெற்ற மாதாவே! இன்னேரம் கணம் சஞ்சலம் - இப்போதாவது என்னுடைய துன்பங்களை ஒளிப்பீராக என்று கணப்பொழுதிலேனும் உம்முடைய சந்நிதியைச் சேராதிருக்கின்றேன் (இப் பாவியை) ஆதரிப்பீராக. எ—று

ஆதனந்தத்தையனையாரையீற்றினகன்றிடவெண்
ணுதனந்தத்தையலைந்திட்டநாடினிரசற்றனரை
யாதனந்தத்தைநயந்தாணயினைக்கரசைநினைந்
தாதனந்தத்தையளித்தியென்னீர்செயலகதனையே. 9

ஆதனம் தத்தை அனையாரை - சொத்துக்களையும் கிளியையொத்த பெண்களையும் மரண காலத்தில் விட்டுப் போதலை நினையாமல், அனந்தத்தை - அளவற்ற திரவியத்தை யலைந்து சம்பாதிக்க நினைக்கின்றவர்களே! வலிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய வெள்ளை இடபத்தின், அந்தத்தை - மேற்புறத்தை விரும்பியவரும் நயினையம்பதிக்குத் தலைவியுமாகிய நாகபூஷணியை, நினைந்து ஆதல் - (மனத்திலே! சிந்தித்தாவது, நம் தத்தை அளித்தி - எமது தத்துக்களிலே காத்தருளும் என்று சொல்லுங்கள். நீவிர் செய்வது அவ்வளவே எ—று.

அத்தனத்தானனத்தெய்தகநாட்டியனங்கிநின்று
டத்தனத்தானனத்தன்றெரியானையகலநெகி
ழத்தனத்தானனத்தன்றணைத்தாணயினைக்கணிக்கி
ளத்தனத்தானனத்தார்கடைக்கேசென்றலைந்தநெஞ்சே 10

அ அந்த தன தானன் செய்தக - என்னுந் தாளமானங்களைக் காட்டுகின்ற திருநடனத்தைச் செய்பவரும் அக்கினியானது நின்றெரிந்தசைகின்ற அத்தன் - கையினையுடையவரும், நத்தான் அனத்தன் - திருமாலும் பிரமனும் காணப்பெறுதவருமாகிய சிவபெருமானை மார்பானது நெகிழும்படி, தனத்து ஆனனத்து - (தனங்களின்றலைகளால் அக்காலத்தில் நெருங்கித்) தழுவியவராகிய நாகபூஷணியம்பாள் எழுந்தருளியிருக்கின்ற நயினையம்பதியிற் சென்று கிளத்தல் நத்து - உன்குறைகளைச் சொல்ல விரும்பு, ஆனநத்தார் - சிறந்த சங்குவளையலையணிந்த வேசிகளது வாசல் வழியே திரிந்தலைந்த மனமே. எ—று.

அலையஞ்சனங்கைக்கடல்சேர்நயினையையன்னநின்சா
யலையஞ்சனங்களறிந்தாலஃதலராதலிற்சி
றலையஞ்சனங்கனலர்க்கிடங்காட்டினரங்கணில்லா
ரலையஞ்சனங்கைநெஞ்சங்கலஞுயதன்றுண்டகைக்கே. 11

அலை கை அஞ்சனம் கடல் - அலைகளாகிய கைகளையுடைய கரிய சமுத்திரத்தாற் சூழ்ந்த நயினையம்பதியையொத்த உன்னுடைய தன்மையை, அம் சனங்கள் - மனத்திட்பமுடைய மகளிர் அறிவாராயின் அது பழியாகும். ஆதலினால் சிறலை - (என்னை)க் கோபியாதே, அனங்கன் அஞ்சு அலர்க்கு - சித்தசனது பஞ்சபாணங்களுக்கு இடங்கொடுத்தவர் அங்கே நிலைத்திரார், அலை அஞ்சல் நங்கை - தலைவியே! இராக்காலத்திற்குப் பயப்படாதே (உனது) தலைவருக்கு [illegible]லுண்டாயதல்ல. எ—று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டகரச்சங்கணநாரதற்கழித்தாரணங்கை
யாண்டகரச்சங்கையதார்கயானனற்கன்னைகரா
ஞண்டகரச்சங்கரித்தாயடியனையாட்செயலெந்
தாண்டகரச்சங்கிசையார்நயினையிலந்தரியே 12

ஆண தகர் அச்சம் - செம்மறிக்கடாவினுல் உண்டாகிய பயத்தை ஒரு கணப்பொழுதிலே நாரதமுனிவருக்கில்லாது ஒழித்த முருகக்கடவுளுக்கும் ஔவைப் பிராட்டியாரை யாட்கொண்ட, கரச்சங்கையது ஆர் - துதிக்கையின் பெருமையையுடைய யானை வதனத்தைக் கொண்ட விநாயகக் கடவுளுக்கும் மாதாவே, கரான் ஆண் தகரச் சங்கரித்தாய் - மகிடாசுரனுனவன் பிளவற்று (வீழும் வண்ணம்) சங்காரஞ் செய்தவரே! அடியனை யாட் கொண்டருள்வது, எந்த ஆண்டு எந்தவச்சரத்தில் அகரச் சங்கு இசையார் - மருதநிலத்தூரிலுள்ள சங்குகளினது ஓசை நிறைந்த நயினையம்பதியிலெழுந்தருளி இருக்கின்ற நாகபூஷணியே. எ—று.

அந்தத்தடங்கடனள்ளார்நயினைக்கணியறந்த
ரந்தத்தடங்கடனென்றேத்தினர்க்கினியானைநீத்
தந்தத்தடங்கடலங்கள்சென்றுயதெனந்தகு
ரந்தத்தடங்கடந்திரடைந்திரெனினதலத்தே 13

அந்தம தடம் கடல் - அழகிய பெரிய சமுத்திர மத்தியிலே இருக்கின்ற நயினையம்பதிக்கு அலங்காரமானவரும், அறத்தார் அந்தத்தள் - சகலதருமகர்த்தாக்களின் முடிவாயுள்ளவரும், தம்கடன் - தமது கடமையிதுவேயென்று துதிக்கின்றவர்களுக்கு இனியவருமாகிய நாகபூஷணியம் பாளை விடுத்து, அந்த தடங்கள் தலங்கள் - தூரத்தேயுள்ள தடாகங்கள் தலங்களாகியவைகளுக்குச் சென்ற தனுலாயபயனென்னை? அந்நயினையம்பதிக்குச் செல்வீர் களாயின், அந்தத்து அந்தகனூர், அடம் கடாதீர் - மரண காலத்திலே யமனுனவர் செய்கின்ற துன்பத்தைக் கடந்த வர்களாவீர் எ—று.

அத்தரக்கைத்தலத்திக்கரைச்செற்றரைக்காடையென்றே
லத்தரக்கைத்தரித்திட்டகத்தர்க்கிடத்தாளங்கா
ரத்தரக்கைத்திரித்தெற்றிதழ்த்தத்தையர்க்காதலேத்தி
ரத்தரக்கைத்தலைக்கிட்டிடத்தென்னயினையகத்தே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மனமே)

அத்தர் அக் கைத்தலத்து இக்கரை - பரமபிதாவும் அந்த கையிடத்தே கருப்புவில்லையுடைய மன்மதனை அழித்து தமதரைக்கு வஸ்திரமாகப் பொருந்த, தரக்கை யகையுற்று - வந்த புலியை உரித்து தரித்தவருமாகிய சிவபிரானது வாமபாகத்தின் கண்ணே யிருக்கின்றவராகிய நாகபூஷணியம்பாளானவர், அலங்காரந்து அரக்கைத் திரித்து எற்று - வடிவினாலே செல்வாக்கை வேறுபடச் செய்து எறிகின்ற சொண்டினையுடைய கிளி போன்ற பெண்களுக்காளாதலை யொழியத் (தமது கிருபையை)த் தந்தருளுதற்கு அழகிய நயினையம்பதியிடத்தே சென்று, கை தலைக்கு இட்டிட - கைகளைத் தலையினிடத்தே வைத்து நிற்பாயாக. எ—று.

ஐயஞ்சலசனிகாசஞ்சதாகதியாதியிட
ரையஞ்சலசனநீத்தார்க்கினிதளியாயநிதி
யையஞ்சலசகந்தந்தாலிசைத்திடலல்லனநெஞ்
சையஞ்சலசக்கரத்தாணயினையயர்க்கலையே. 15

நெஞ்சை மனமே ஐயம்சலகனி - சேடம் நீர்த்தோஷம் காசநோய் வாய்வு முதலிய துன்பங்களுக்குப் பயப்படாதே, அசனம் - போசனத்தைத் துறவிகளுக்கு நன்று கக் கொடுப்பாயாக சிறந்த திரவியங்கள், ஐ அஞ்சு அல- இருபத்தைந்து மட்டுமல்லாமல் இவ்வுலகத்தையே தந்தாலும் பொய்சொல்லாதே, அம் சலசக்கரத்தாள் - அழகிய செந்தாமரை போலும் திருக்கரங்களையுடைய நாகபூஷணியம்பாளெழுந்தருளி இருக்கின்ற நயினையம்பதியை மறவாதே. எ—று.

அயனந்தரச்சங்கரியாணரேற்றினராழ்கடனஞ்
சயனந்தரச்சங்கரிக்களத்தாற்றினரத்தத்தினோ
முயனந்தரச்சங்கரிநயினுநிதியாண்டெனைநல்
லயனந்தரச்சங்கரியடியேன்செயகங்களையே. 16

ஐயன் — யாவராலும் பூசிக்கப்படுபவரும், அந்தரம் சங்கர்-சிதாகாசமாகிய சபையையுடையவரும், இயாணர் ஏற்றினர் - அழகிய இடபத்தை யூர்பவரும், அத்தி நஞ்சத்து அயன் நந்தம் அச்சம் - பாற்கடலிலெழுந்த நஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் பிரமனுக்கும் திருமாலுக்கும் உண்டாய பயங்கரத்தை (அந்நஞ்சையுண்டு கறுத்த திருமிடத்தாற் தீர்த்தவருமாகிய சிவபிரானது வாமபாகத்தில் வீற்றிருக்கின்ற ஏழை பெண்மையுடையவரே, அணந்தரம் சங்கரி- அழகிய சங்கரியென்னுந் திருநாமத்தைப் பெற்றவரே! நயினையம்பதிக்குச் செல்வமாயுள்ளவரே என்னை அடிமை கொண்டு குறைவற்ற, அயணம்தர - ஆகாரத்தைத் தந்தருளும் அடியேன் செய்துள்ள பாவங்களையொழித்தருளும். எ—று.

அகனயந்தாங்கிநகைக்கின்றநாரியராசையினே
னகனயந்தானென்றகலாதடிகடந்தாளியலே
ரகனயந்தானத்தியானனத்தானரியாரணநா
யகனயந்தாயெனக்கண்டாய்நயினைக்கணிகலனே. 17

அகல் நயம் தாங்கி - மிகுந்த வருவாயைப் பொறுத்து முறுவல் செய்கின்ற வேசிகளது ஆசை யொழியாதவனாகிய என்னுடைய, அகன் அயம் தானென்று - மனமானது இரும்பே யென்று நினைத்தருளி என்னை விட்டு விலகாமல் உமது திருவடிகளைத் தந்து ஆண்டருளும், இயல் ஏரகம் நயந்தான் - பொருந்தப்பெற்ற திருவேரகத்தை விரும்பிய முருகக் கடவுளையும், யானை வதனத்தைக் கொண்டருளிய விநாயகக் கடவுளையும் திருமாலையும், ஆரணநாயகனை - பிரமனையும் அழகிய மாதாவாகத் தந்தருளியவரே! நயினையம்பதிக்குச் சிறந்த ஆபரணம்போல் வீற்றிருக்கின்றவரே எ—று.

அணியலங்காரநிதியாடைநீர்சிலையானநெல்லா
னணியலங்காநகராண்டானிசைக்கினியாளந்தணு
ரணியலங்கானளினங்கிழ்நயினையில்ண்ணலிந்நா
ளணியலங்காரந்தராயெனிற்றேறலாயிழையே. 18

அணி ஆபரணங்களும் அலங்காரநிதி - சிறந்த திரவியங்களும் வஸ்திரங்களும் நீர்நிலைகளும் மலைகளும் வாகனங்களும் நெல்லினங்களும் பசுக்களும், அணியலங்கா நகர் - பொருந்தப்பெற்ற இலங்காபுரியை அரசு செலுத்திய இராவணனுற் பாடப்பெற்ற சாமவேதகானத்துக்கு உவப்புற்றவரும், அந்தண் தாரணி - அழகிய தண்ணளியுள்ள தாரணி என்னுந் திருநாமத்தை யுடையவருமாகிய நாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஷணியம்பாள் எழுந்தருளியிருக்கின்ற, அலம காவல் நளினம் - (வயல்களிலே யுழுகின்ற) கலப்பைகள் தாமரைகளின் தாள்களைக் கிளிக்கின்ற (சிறப்பையுடைய) நயினையம்பதியின்கண்ணுள்ள தலைவனே இற்றைத் தினத்தில், அணி அலங்கு ஆரம் - (நீ எம்மனைக்கண்) வந்து விளங்கா நின்ற மாலையைத் தராதொழிவையாயின் எம் தலைவி தெளிவடையமாட்டாள். எ—று.

ஆயிரந்தண்டலைநாகணையானன்றரசிடைச்சிந்
தாயிரந்தண்டலைநாடளந்தானறியாளிசையா
ராயிரந்தண்டலைசெய்யீர்நயினைக்கடைகிலிரை
யாயிரந்தண்டலையந்தகனுற்றிலரணென்னையே: 19

ஆயிரம் தண் தலை நாகம் - ஆயிரமென்னும் தண்ணிய தலைகள் பொருந்திய ஆதிசேஷனைச் சயனமாகவுடையவரும், அக்காலத்தில் மகாவலிச் சக்கிரவர்த்தியின் முன் சிந்து, ஆய். இரந்து - குறள் வடிவத்துடன் யாசித்து, அண்டு, அலை - நெருங்கிய கடலாற் சூழ்ந்த பூமியை (ஓரடியாக) அளந்தவருமாகிய திருமாலுமறியப் பொறாதவராகிய நாகபூஷணியம்பாளின் பெருமைகளை, ஆராயீர் - ஆராயமாட்டீர், அம் தண்டலை செய்யீர் - அழகிய பூஞ்சோலைகளைச் செய்யமாட்டீர், நயினையம்பதிக்குச் செல்லமாட்டீர், ஐ ஆயிரம் தண்டனை - ஐயாயிரமென்னுங் கணக்கினவாய துன்பங்களை இயமனுனவன் செய்யும் பொழுது உம்மைக் காப்பது எது? எ—று.

அரக்கனலாகநெஞ்சங்கைகளேந்திநின்றுளடிக்கீ
ளரக்கனலாகநெரித்தாரலரியிந்தங்கியங்கண்
ணரக்கனலாரந்தரித்தாரிடத்தியென்னோனகந்த
ளரக்கனலாதிங்களித்தாணயினையிருரணங்கே. 20

நெஞ்சு அனல் அரக்காக - உள்ளமானது அக்கினியில் வைத்த மெழுகு போலுருக கைகளை யேந்திக்கொண்டு நின்று, ஆள் அடிக்கீள் அரக்கன் அல் ஆகம் - ஆளுந் தன்மையுடைய ஓர் திருவடியின்கீழ் வைத்து முயலகன் என்னும் அசுரனின் கரிய உடலை நெரித்தவரும் சூரியன் சந்திரன் அக்கினியாகிய நேத்திரங்களை உடையவரும், அக்கம் நல் ஆரம் - எலும்பு மணியாலாய நல்ல மாலையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்தருளியவருமாகிய சிவபிரானது வாமபாகத்தில் வீற்றிருக்கின்றவரேயென்று தோத்திரஞ் செய்யாத பாவியேனுடைய மனமானது, தளரக்கனலாது - சோர்வடையும்படி கோபஞ் செய்யாமல் இப்பொழுதே உமது கிருபையைத் தந்து ஆண்டருள்வீர் நயினையம்பதியிலெழுந்தருளியிருக்கின்ற நாகபூஷணியம்பாளே. எ—று.

ஆரணனஞ்சத்தலையிடைத்தாக்கியளித்திட்டசே
யாரணன சத்தினர்க்கீந்ததிற்சிறித டலையை
யாரணனஞ்சக்கரத்தினன்றுனையெற்கங்கசன்செய்
யாரணனஞ்சஞ்சிடத்தாநயினையளிக்கடலே. 21

ஆரணன் அஞ்ச - பிரமதேவன் அச்சமுறும்படியவனது தலையிலே கண்ணே குட்டி, சிருட்டித் தொழிலைச் செய்த, சேயார் - உமது புத்திரராகிய முருகவேளானவர், அணல் நஞ்சத்தினர்க்கு - மிடற்றின் கண்ணே ஆலாதலத்தைத் தரித்த பரமசிவனுக்கு உபதேசித்த உண்மைப் பொருளிலே ஓர் சிறிது, ஆடல் ஐயையார் அணன் - போராடலைச் செய்கின்ற துர்க்காதேவிக்குத் தமையனும், அம் சக்கரத்தினன் - அழகிய சக்கராயுதத்தை உடையவருமாகிய திருமாலுக்குத் தாயாகவுள்ளவரே, மன்மதனானவன் ரணஞ் செய்யா நஞ்சு அஞ்சிட - புண்ணுறும்படி தன் பாணங்களைச் செலுத்தாது வருந்தி அச்சமடைய அடியேனுக்குபதேசித்தருளும் நயினையம்பதியிலெழுந்தருளியிருக்கும் கிருபா சமுத்திரமே! எ—று.

அளிக்கண்ணியரிடைக்காடைக்கிளநகிற்காசையிற்சென்
றளிக்கண்ணிரையிறைத்தல்லல்கண்டே யடங்கேனையந்தண்
ணளிக்கண்ணியனென்றலங்கலந்தாதியதார்நயினை
யளிக்கண்ணிலனறியத்தரித்தாளில்லையசங்களே. 22

அளி கண்ணியர் - வண்டையொத்த கண்களையுடைய பெண்களது சிற்றிடைக்கும் பட்டுடைக்கும் இளமுலைகளுக்கும் ஆசை கொண்டவர்கள் பாற்சென்று, அல்லல் கண்டு அளிக்கண்ணீரை இறைத்து - (அளவற்ற) துன்பங்களையடைந்து கண்களிலேயிருந்து சொரிகின்ற நீரை அள்ளியிறைத்தும் அவ்வாசை யொழியப்பெறாத தமியேனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணனளிக்கு அன்னியனென்று - தமது அழகிய கிருபைக்குப் பாத்திரமுள்ளவனென்று, அலங்கல் - மாலையாகிய இவ்வந்தாதியை, ஆர் நயினையள் - நிறைவுற்ற நயினையம்பதியை உடையவராகிய நாகபூஷணியம்பாளானவர், இக்கண் நிலன் - இந்தப்பெரிய உலகம் அறியும்படி தரித்தருளினர். (ஆதலால்) இனி யாதோர் பயமுமில்லை. எ—று.

அச்சந்தனத்தைக்கலைகாணச்செல்கென்றியிலெறிந்தா
னச்சந்தனத்தையணிந்தாளைச்சேர்ந்திட்டதாங்கின்றியீ
ரச்சந்தனத்தையனலாக்கியநகிலாயிழைகா
ணச்சந்தனத்தைநடத்தாய்நயினையிறைறையே. 23

தன் அத்தைக்கு அனை அச்சம் காண - தமது மாமியாருக்குத் தாயாகிய சமுத்திரம் அஞ்சும்படி செல்வாயாக வென்று வேற்படையைச் செலுத்திய கந்தக் கடவுளானவர், அ சந்தம் நத்தை - அந்த அழகினையுடைய சங்குவளையலை யணிந்த வள்ளிநாயகியைச் சேர்ந்த தன்மைபோலன்றி, ஈரச்சந்தனத்தை - குளிர்ந்த சந்தனக் குழம்பைநெருப்பாகக் காட்டுகின்ற ஸ்தனங்களையுடைய தலைவியானவள், காண சந்து அனத்தை - காணும்படி தூதாக அன்னத்தைப் போக்காதே நயினையம்பதியிலிராநின்ற தலைமகனே. எ—று.

ஆரியனாகநரிக்கரியாக்கையளித்தகத்தர்க்
காரியனாகரரேத்தியதென்கலையாய்ந்தசங்கத்
தாரியனாகனங்காட்டியசேய்க்கினியாய்நரசிங்
காரியனாகரிகந்திர்நயினையிலானந்தியே. 24

ஆரியன் ஆக - ஆரிய தேசத்திலுள்ள குதிரை வாணிபர் போலாவதற்கு நரிக்கூட்டங்களுக்குக் குதிரை வடிவத்தைக் கொடுத்தருளிய தலைவராகிய பரமசிவனுக்கும், ஆரியம் நாகரர் - அரியம் நாகரமென்னும் பாஷைகளையுடையாரால் புகழ்பெற்ற அழகிய தமிழ்நூல் ஆராய்ச்சியிற் சிறந்த சங்கத்தார், இயல் நா கனம் - சங்கப்புலவர்களது உரைகாணும் நாவின் பெருமையைக் காட்டியருளிய முருகக் கடவுளுக்கும் இனியவரே? நரசிங்காரி - நரசிங்கத்தை வதைத்தருளியவரே. (என்னிடத்துள்ள) அநாகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச் செயல்களை யொழித்தருளும் நயினையம்பதியிலெழுந்தருளி இருக்கின்ற ஆனந்தமயமானவரே. எ—று.

ஆனந்தியானத்தகிலேசநீணதியார்ந்தசடை
யானந்தியானநிறத்தானிடத்தியென்றஞ்சிரநெஞ்
சானந்தியானஞ்செயாரெனக்கேடடைந்தான்றகலி
யானந்தியானயினைக்கணின்றுளையடைந்தனனே, 25

ஆன் நந்தி யானத்து - பசுவினமாகிய இடபவாகனத்தையுடைய அகிலாண்ட நாயகரும் பெரியகங்காநதி நிறைந்த சடாபாரத்தையுடையவரும், அந்தி ஆன - செவ்வானம் போன்ற திருமேனியையுடையவருமாகிய பரமசிவனது இடப்பாகத்தில் வீற்றிருப்பவரேயென்று, அம் சிரத்தால் நம் நெஞ்சால் தியானம் - அழகிய சிரத்தால் வணங்குதலும் நெஞ்சினால் தியானமும் செய்யாதவரைப் போல் கெடுதலுற்று அதிகமான வறுமையினால், நந்தி யான் — வருந்தி யான் நயினையம்பதியிலெழுந்தருளியிருக்கின்ற உம்முடைய திருவடிகளைப் புகலிடமென்று வந்து சேர்ந்தேன். எ—று.

அடையலராணிதஞ்செய்கின்றிலேனர்ச்சனைகளந்நா
ளடையலராகந்தடிந்தாயெனறேத்திலனுன்றசிரத்
தடையலராநிறையாழியினுயென்றெனன்கை
யடையலராநளினத்தனத்தாய்நயினுநிதியே. 26

அடை அலரால் நிதம் - பத்திரங்களினாலும் புஷ்பங்களினாலும் நாடோறும் காயத்தால் அர்ச்சனை செய்கிலேன், அக்காலத்தில் அடையலர் ஆகம் - பகைவர்களுடைய உடலைச் சங்காரஞ் செய்தவரேயென்று வாக்கால் துதிக்கிலேன் பரந்ததலைகளின், அடையல் அரா - நெருக்கத்தையுடைய ஆதிசேடனென்னுஞ் சர்ப்பத்தை நிறைந்த கைம்மோதிரமாகக் கொண்டவரே யென்று மனத்தால் தியானிக்கிலேன், கையடை -(இப்போது உமக்கே) படைக்கலம் தாமரை மொட்டுப் போன்ற ஸ்தனபாரங்களையுடையவரே? நயினையம்பதிக்குச் செல்வமாயுள்ளவரே? எ-று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிதந்தங்கணயர்ந்திடற்காக்கிநலராணியத்
தானிதந்தங்கநடித்திசைகாட்டிக்கரியனைநல்
லானிதந்தந்தங்கலிதிர்த்தாரைநாடியரைக்கணந்தி
யானிதந்தங்களிசையார்நயினையிலன்னையெனறே. 27.

ஆல் நிதம் - ஆலிலையை நாடோறும் தமது அறி துயிற் பள்ளியாகக்கொண்டு நல்ல காட்டினிடத்தே, ஆன் இதம்தங்க. பசுக்களின்பமடையும்படி கூத்தாடி வேய்ங்குழல் வாசித்துக் காட்டிய திருமாலுக்கும் காண்டாற்கரியராகிய நாகபூஷணியம்பாளை சிறந்த ஆனி தம் தம்-ஆனிமாதத்திலே (தரிசித்து) தங்கடங்களின் குறைகளைத் தீர்த்துக்கொண்டவர்களைப் பார்த்தாவது, அரைக்கணப் பொழுது தியானி-தியானஞ் செய்வோமாக, தந் தங்கள்-கொம்பு வாத்தியங்கள் சப்திக்கின்ற நயினையம்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற எமது தாயே யென்று. எ - று.

அன்னந்தடங்கழருர்நீர்க்கழனியடைந்தயலா
ரன்னந்தடங்களினுடியநாடநினுயிழைந
லன்னந்தடங்கநீங்காணிசிக்கணடங்கிடநி
லன்னந்தடங்கலிலைகாணயினைக்கரியளையே, 28.

அம் நந்து அடங்கு அழறு - அழகிய சங்குகள் புதைந்திருக்கின்ற சேறு பொருந்திய நீரையுடைய வயல்களிலே (இரைக்காகச் சென்று அன்னங்கள் பக்கத்தேயுள்ள வாவிகளிலே மூழ்குகின்ற நாட்டையுடைய தலைமகனே? உனது நாயகி. நலன் நந்தள் தங்கு அகம் - தன்னெழிற் குறையாள் இருக்கையினின்றும் பிரியாள் (ஆதலால்) இரவுண்டாய் வருளார் துயில் போந்த பின்பு, நம் தடங்கல் இலை - எம்முடைய தடையேயில்லை நயினையம் பதியினு மரியளாய் (எம் தலைவியை (நீ) கண்டு கொள்வாயாக. எ—று.

அரியாரயக்கிரிநீரியநிணரராகியநல்
லரியாரயன்றனிகாணுய்நயினையினுசையிற்செல்
லரியாரையர்ந்திடத்தாங்கியதாங்கெனகத்திடர்க
ளரியாரயந்தரங்கண்டேயிரந்திடலாக்கைநின்றே 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரி ஆர் அயம் கிரி - நரசிங்கம் பொருந்தப்பெறுங் குதிரை பன்றி மீன் ஆமை புகழப்பெற்ற மனிதர் ஆகிய அவதாரங்களையுடைய நல் அரியார் அயன்-நல்ல திருமாலும் பிரமனும் பரதந்திரராதலைக் கண்டவரே? நயினையம்பதியினிடத்தே அன்பினோடும் வருகின்ற அரியார் அயர்ந்திட - அரியராய் பத்தர்கள் வருந்தும்போது காத்தருளும் தன்மைபோல என்னகத்தின் கணுள்ளதுன்பங்களை அரியொழித்தருளும் - இவ்வுடம்போடு கூடிநின்று ஆயத்து நேர்ந்துழி வேறியாரைக்கேட்பது. எ று.

ஆக்கங்கியாதிக்கடனியலந்தனராசியற
ருக்கங்கியாதியினஞ்சேயகணிலருடையணி
யாக்கங்கியாதிங்கெனநண்ணிநற்கதிக்காளினர்க
டரக்கங்கியாதிலையென்றார்நயினையலங்கலையே. 30

ஆக்கு அங்கி ஆதி - உண்டாக்குகின்ற அக்கினிகாரிய முதலிய கடன்களைக் (குறைவறச்) செய்கின்ற அந்தணரது ஆசியையும் தருமத்தையும், ஆக்கம் கியாதி-திரவியத்தையும் புகழையும் சுற்றத்தையும் மக்களையும் பெரிய நிலத்தையும் வஸ்திரத்தையும் ஆபரணத்தையும், ஆ கங்கு இயாது இங்கு என - யசுக்களையும் இவ்வுலகத்தில் அளவு ஏது என்று சொல்லும்படி பெற்று (மறுமையிலே) நல்ல பதவிக்கும் ஆளாவார்கள், கடாக்கு - ஒருவரின் வேண்டுதலுக்கு, அங்கு-அப்பொழுது இந்நயினை (யந்தாதியாகிய) மாலையை, இயாதிலை என்றார் - மனனமில்லை யென்று சொல்லாதவர்கள். எ-று

இதனது தாற்பரியம் - இந்நயினையந்தாதியை மனதிற் பதியும் வண்ணம் பாராயணஞ் செய்பவர்கள் இம்மையிலே சகலசம்பத்துக்களையுமடைந்து மறுமையிலே நல்ல பதவியைப் பெறுதற்குரியராவர் என்பதாம்.

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பாலும் பண்பாலும் எம்மை
வழிநடத்தி மறைந்த எமது குடும்பத் தலைவர்
திரு. மு. க. சங்கரப்பிள்ளை அவர்களின்
மரணச்சடங்கில் கலந்து எமது ஆழ்ந்த துயரத்
தில் பங்கு கொண்டு சகல உதவிகளையும்
வழங்கி ஆறுதல் அளித்த அனைவருக்கும்
அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகளில்
கலந்து கொண்ட அனைவருக்கும் எமது துயரம்
தோய்ந்த நன்றியையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

" கமலபதி "
நயினாதீவு-1
12–1–1987

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org